# மன்னா

CSI தமிழ் திருச்சபை
அலைன்



நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்
அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான்
ஓசியா 14:5

I will be like the dew to Israel;
he will blossom like a lily.
Hosea 14:5

பொழிவு12 ஜுலை ஆகஸ்ட் 2019 ஆகாரம் 07 -08

## 2019 ஜுலை மாத ஊழியங்கள்
## Service / Ministry in the Month of July 2019

| | | |
|---|---|---|
| 05th July<br>11:00AM–1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 05th July<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 12th July<br>7:00PM – 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 19th July<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 20th July<br>7:00PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்கம் ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 26th July<br>7:30PM–8:30PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 31st July<br>11:30PM-12:30AM | மாத இறுதி மற்றும் ஆகஸ்ட் மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

## 2019 ஆகஸ்ட் மாத ஊழியங்கள்
## Service / Ministry in the Month of August 2019

| | | |
|---|---|---|
| 02nd Aug<br>11:00AM–1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 02nd Aug<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 09th Aug<br>7:00PM – 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 16th Aug<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 17th Aug<br>7:30PM – 8:30PM | பெண்கள் ஐக்கிய சங்கம் ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 23rd Aug<br>7:00PM–9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 30th Aug<br>7:00PM–9:00PM | துதி பாடல் ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 31st July<br>11:30PM-12:30AM | மாத இறுதி மற்றும் செப்டம்பர் மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

## உள்ளே


ஆயர் மடல்

திருமறை தியானப்பகுதி

செயலரிடமிருந்து

வேதாகம களஞ்சியம்

மிஷனரி சுயசரிதை

சாட்சிகள்

கட்டுரைகள்

யூத் ஸ்பெஷல்
Youth Special

சிறுவர் பகுதி
Children's Corner

வேத வினா விடை போட்டி

பிறந்த நாள் திருமண நாள் ஆசரிப்போர்

தெரிந்து கொள்வோம்

தினசரி வேதவாசிப்பு


திருச்சபையின் ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.

050 586 8173 / 056 441 1225 / 050 482 1006

Welcome to our Church

# CSI தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

மெயின் ஒர்ஷிப் ஹால் – ஒயாசிஸ் ஆஸ்பித்திரி வளாகம், அல்–அய்ன்
Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st& 3rd Fridays / வெள்ளி | *7:00 PM* | Communion Service /திருவிருந்து ஆராதனை |
| 1st& 3rd Fridays / வெள்ளி | *6:30 PM* | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *7:00 PM* | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *6:30 PM* | Bible Study / வேதாகம வகுப்பு |
| Friday's / வெள்ளி | *6:15 PM* | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1stFriday / வெள்ளி | *11:00AM* | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | *7:00 PM* | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | *7:30 PM* | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | *7:30 PM* | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | *11:30PM* | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |

## குறிப்பு:

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.



*Your name / Quiz type / Month-Year*

***Sample: Joshua/ Childrens Quiz / JulAug-19***
***Crasslin / Kids Colouring / JulAug-19***
***Christopher / Bible Quiz / JulAug-19***

***Church Email: csitcalain@gmail.com***



# ஆயர் மடல்...



இயேசு கிறிஸ்துவின் கிருபைக்கு பாத்திரவான்களே!

இந்த கர்த்தராகிய இயேசுவைப்பற்றிக்கொண்டு, அவரையே சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தேவனுடைய பிள்ளை என்ற அதிகாரத்தையும், உரிமையையும் பெற்றவர்களே! கர்த்தருடைய ஆலயமாகிய CSI தமிழ் திருச்சபையில் நாட்டப்பட்டு, தேவனுடைய சமூகத்தில் செழித்து, எப்பொழுதும் பசுமையும், பஷ்டியுமாக இருக்க பெயர் சொல்லி அழைக்கப்பட்டவர்களே! இந்த புதிய மாதங்களான ஜூலை,ஆகஸ்ட்டில் இயேசுவைப்பற்றிய அறிகிற அறிவில் விருத்தியடைய,அவரோடு நெருங்கிய ஐக்கியம்வைக்க, திருச்சபை மக்களோடு, குறிப்பாக அறிமுகமில்லாத மக்களோடு ஒரு நல்ல ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டுகிறேன்.நம்மில் அநேகர் விடுமுறையில் தாய் நாட்டிற்கு செல்ல இருக்கிறீர்கள். **Enjoy the holidays! Happy vacation! Bring something for weekly auction in the Church.**

இன்றைய சூழலைப்பார்க்கும்பொழுது நாடுகளுக்கிடையே சண்டை போடும் எண்ணங்கள் மேலோங்கிக்கொண்டிருக்கிறது. நம்முடைய மத்திய கிழக்குப்பிராந்தியத்திலேயே உலகப்போர் வந்து விடுமோ என்ற ஒரு அச்சம் நிலவிக்கொண்டிருக்கிறது. Trade war has already started. நாம் வாழ்ந்துகொண்டிருக்கிற பூமி சூடுண்டாகி, பருவநிலை மாற்றங்கள்,தண்ணீர் பஞ்சம்,உணவுப்பஞ்சம்,எரிபொருள் பஞ்சம் வந்துவிடுமோ என்ற பயமும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த அடையாளங்களைப் பார்க்கும்பொழுது இயேசுவின் இரண்டாம் வருகை சமீபம் என்ற நம்பிக்கை பெலப்படுகிற படியால், திருச்சபை மணவாட்டியாகிய நாம்,எப்பொழுதும் ஆவிக்குறிய விழிப்புணர்வோடு, ஆயத்தமாக இருக்க வேண்டும். புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளைப்போல, எப்பொழுதும் பரிசுத்த ஆவியானவருக்கு அதிகமாக இடம்கொடுத்து, அவரது ஆளுகைக்குட்பட்ட விசுவாச வாழ்க்கையில் தேவனுக்காக கனிகளை கொடுக்க வேண்டிக்கொள்கிறேன். திருச்சபையாக ஏறெடுக்கும் எல்லா ஆராதனை, மற்றும் ஊழியங்களில் உற்சாகத்தோடு பங்குபெற ஒவ்வொருவரையும் அன்போடு அழைக்கும்...

உங்களுடைய ஆயர்,

**Rev. M. Christopher Rajendran**

# திருமறை தியானப்பகுதி

## “நான் இஸ்ரவேலுக்கு பனியைப்போலிருப்பேன்! அவன் லீலிப்புஷ்பத்தைப்போல மலருவான்!

**ஓசியா 14:5b**

## “I Will be as the dew to Israel! He shall blossom as the Lily”

ஓசியா தீர்க்கதரிசி வடக்கு அரசான 10 கோத்திரங்களுக்கு (இஸ்ரவேல்) தேவனுடைய வார்த்தையை எடுத்துச்சென்றவர். இவர்களை எப்பிராயீம் என்று அழைக்கிறோம். (Ephraim). தெற்கு அரசை யூதா என்றும் குறிப்பிடுகிறோம். ஓசியா ஊழியப்பின்னணியை (2இராஜாக்கள் 15–17 அதிகாரங்களில்) பார்க்க முடியும். இவர் இரண்டாம் யெரோபெயாமின் உலகச்செழிப்புமிக்க 40 ஆண்டு பொற்கால ஆட்சியின் (கி.மு.793–753) மத்தியில் தன் ஊதியத்தை தொடங்கினார். தேவ மக்களின் அக்கிரமமான செயல்களை, பாவங்களை, விசுவாச பின்வாங்குதலை (Backsliding) தேவ அன்பின் பார்வையில் பார்த்து ஊழியம் செய்ய பயிற்றுவிக்கப்படுகிறார். (ஓசியா 11ம் அதிகாரம்). அன்புத்தீர்க்கதரிசி ஓசியாவின் மூலமாக தேவனுடைய அன்பு, தேவ மக்கள் மீது வாக்குத்தத்தமாக பொழியப்படுகிறது. தேவ ஜனம் தேவனை நோக்கி பார்த்து, தனது பாவங்களை உணர்ந்து அறிக்கையிட்டு, மனந்திரும்பிய மைந்தனைப்போல, மனந்திருந்தி வந்திருக்கிற மக்கள் மீது கீழ்க்கண்ட ஆசீர்வாதங்களை பொழியப்போவதாக தீர்க்கதரிசனம் உரைக்கிறார்:

ஓசியா 14: 1–4வசனங்களில் இஸ்ரவேலே உன்தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு! நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாக சிநேகிப்பேன் என்று சொன்ன தேவன், நான் இஸ்ரவேலுக்கு பனியைப்போல இருப்பேன்..! அவன் லீலிப்புஷ்பத்தைப் போல மலருவான் என்ற ஒரு அற்புதமான வாக்குத்தத்தத்தை கொடுக்கிறார். How encouraging word from Almighty God! For those who repent like Prodigal son. This part of the text as a figurative description of the revivifying and a beautifying influence of the Holy Spirit upon the individual as well as the community of believers in the Church. When the darkness was over

the earth, Dew is coming upon the face of the earth. Like that during the dark moments of the Believers life, heavenly dew is descending upon the Repenting Believers life. The Good news to the Christian Believers is Heavenly dew is available to you when you are down.

நான் இஸ்ரவேலுக்கு பனியைப்போல இருப்பேன் என்பதை நினைத்துப்பார்க்க, சிந்தனை செய்ய, ருசித்துப்பார்க்க அனுதினமும் ஆவிக்குறிய விழிப்புணர்வுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். கர்த்தர் தன்னை நேசிக்கிற பிள்ளைகள்மீது பனியைப்போல இரங்குகிற அனுபவம் மிக உன்னதமான அனுபவமாகும். பொதுவாக பனி பகல் நேரத்தில் மரம்,செடி கொடிகளின் மீது இரங்காது, இரவுநேரத்தில் தான் இரங்கும். அது இரங்கும்பொழுது எந்தவிதமான ஓசையையும் எழுப்பிக்கொண்டு இரங்குவதில்லை, மழையைப்போல சத்தமிட்டும் இரங்குவதில்லை.

In the midst of greater darkness, greatest chillness the dew is descending upon the earth silently, even it won’t disturb the insects ‘sleep. அதிகாலை சூரிய ஒளியில் தான் இலைகளின் மீது வைரம் போல சுடர்விட்டுக்கொண்டிருக்கும்.No man has seen God at any time but each dew declares God’s glorious presence. இரவு நேரத்தில் வெட்ட வெளியில் நாம் இருந்தால் பனியின் ஈரத்தன்மையை நாம் உணரமுடியும். Heavenly dew of God is also descending on the believer’s life in the same manner. வரட்சி,கடுமையான வெப்பம் நிறைந்த பாலைநில சூழல் போன்ற விசுவாசியின் வாழ்க்கையில் எப்படிப்பட்ட போராட்டங்கள், ஏமாற்றங்கள்,இழப்புக்கள், வறுமைகள், நோய்கள் வந்தாலும் கர்த்தராகிய நான் உங்கள் மீது பனியைப்போல இரங்கி உங்களை செழிக்கச்செய்வேன், லீலிப்புஷ்பத்தைப்போல பூக்கச்செய்வேன் என்று வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார். விசுவாசிகளாகிய நாம் இந்த வாக்குத்தத்தத்தை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. உங்கள் வாழ்க்கையின் வறட்சியான சூழலில் சோர்ந்து போய் காணப்படுகிறீர்களா? இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசத்தோடு பிடித்துக்கொள்ளுங்கள், ஆவிக்குரிய விழிப்புணர்வோடிருங்கள் கர்த்தர் உங்கள் வாழ்க்கையின் எல்லாப்பகுதியின் மீது பனியைப்போல இரங்குவதை ருசித்துப்பார்க்க முடியும்.

நீங்கள் நாளுக்கு நாள் லீபனோனைப்போல (Verse 5b) வேரூன்றி பெலப்படுகிறதை நீங்களே அனுபவிக்க முடியும். லீலிப்புஷ்பத்தைப்போல மலர்ந்து, பூத்துக்குலுங்கி நறுமணம் வீசி தேவனை மகிமைப்படுத்துவதை இந்த

உலகம் நம் வாழ்வின் மூலம் காணும். நாம் தேவனுக்காக பூத்துக்குலுங்க அழைக்கப்பட்டிருக்கிறோம். எல்லாவிதமான மலட்டுத்தன்மையை கர்த்தர் எடுத்துப்போட்டு நம்முடைய வாழ்க்கையை செழிப்புள்ளதாக்கி, பூத்துக்குலுங்கச்செய்ய கர்த்தர் அனுதினமும் பனியைப்போல நம்முடைய மலட்டுத்தன்மையுள்ள எல்லாப்பகுதியின் மீது இரங்க நாம் இடைவிடாமல் ஜெபிப்போம். Dew fall once in a season would not be useful it should fall night after night like Manna. We should be always depending upon God's dew of sustenance daily. For our Spiritual refreshments we need daily fall of Divine dew. Daily confession, daily repentance and daily purification is the spiritual atmosphere in which we can enjoy descending of God's fresh dew daily for our fertility and prosperity. Without dew corn would not reach maturity and olives, vines and fig trees would yield no fruits. According to 1 king 17:1 Prophet Elijah cursed that there shall be neither dew nor rain these years. மழைக்கு இணையாக பனியைக்குறித்து எலியா சொல்வதைப் பார்க்கிறோம். பனி இல்லையேல் வரட்சி,நவீன கால ஆராய்ச்சி பனியைக்குறித்து என்ன சொல்லுகிறது?

According to American Friends of Tel Aviv University, Dew is often celebrated as a bringer of life. Dew serves as an important water source for plant life in climate such as those in the Eastern Mediterranean, and deserts. Dew is important source of moisture in the air. It surrounds the plant leaves nearly every morning for approximately 2 to 3 hours before sun rise. In the Eastern Mediterranean region for early morning photosynthesis and plant growth, plants desperately need dew, midday under very hot sun stomata will be closed as defence mechanism. Early morning dew hours are the period of maximum growth for plants. Dew has been idealized in Israel region for its ability to help fruits and vegetables grow in dry and in hospitable region.

இதை அறிந்திருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார் நான் இஸ்ரவேலுக்கு பனியைப்போல இருப்பதால் Verse 6 ன்படி அவன் கிளைகள் ஓங்கிப் படரும், அவன் அலஙகாரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப் போலவும், அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப்போலவும் இருக்கும். தானிய விளைச்சலைப்போல செழித்து, திராட்சைசெடிகளைப்போல படருவார்கள், கர்த்தராலே என்கனி உண்டாயிற்று என்று எப்பிராயீம் சொல்லுவான். ஆதியாகமம் 41:52 ன்படி நான்(யோசேப்பு) சிறுமைப்பட்டிருந்த

தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான். தன்னை நோக்கி உண்மையாய் மனந்திரும்புகிற ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசிக்கும் அவர்களுடைய கடுமையான இருள் சூழ்ந்த சூழலில் கர்த்தராகிய இயேசு பனியைப்போல அவர்கள் மீது இரங்கி அவர்களை பலுகப்பண்ணுவார், செழிக்கச்செய்வார்.

இந்த மாதங்களில் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை நம்முடைய ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் பொழியச்செய்வாராக.

**அன்புடன்... உங்கள் ஆயர்,**
**Rev. M. Christopher Rajendran**

## Put God First and the rest is Blessed

சபை மக்கள் தங்கள் வீட்டில் உள்ள முதற்பலன்கள் மற்றும் தேவனுக்கு கொடுக்க விருப்பமுள்ள பொருள்களை சபைமுன் காணிக்கையாய் செலுத்தி தேவனை மகிமைப்படுத்தலாம். அந்த பொருள்; சபை ஆராதனை முடிந்த பிற்பாடு ஏலம் விடப்படும். சபை மக்கள் உற்சாகத்துடன் அந்த ஏலத்தில் பங்கு பெறுமாறு அழைக்கப்படுகிறீர்கள்.




| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம், கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர் குருகிலாமூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/- Month | AED 450/- Month |
| கர்த்தர் உங்களோடு பேசுவாரனால்...நீங்களும் இந்த மிஷனரி ஊழியத்தை தாங்க முன்வாருங்கள். ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க முன்வர உங்களை அன்போடு அழைக்கிறோம். | | |

# செயலரிடமிருந்து...

பிரியமானவர்களே...

இயேசு கிறிஸ்துவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். ஜெபத்தினாலும் தியாக–உற்சாக காணிக்கைகளினாலும் இவ்வூழியத்தை தாங்கி வருகிற உங்களுக்கு கர்த்தர் தெய்வீக சமாதானத்தை அருளுவதோடு தமது செட்டைகளின் நிழலில் உங்களை பாதுகாத்து மகிமையினாலும் கனத்தினாலும் உங்களை முடிசூட்டுவார்.

**மிஷன் வெள்ளி:** மிஷனரி தரிசன ஊழியங்களுக்காய் ஜெபித்த, உதாரத்துவமாய் கொடுத்த உங்கள் அனைவருக்கும் சபையின் சார்பில் நன்றி தெரிவித்து கொள்ளுகிறேன். அவ்வாரதனையில் GEMS ஸ்தாபனத்தின் Regional Director மற்றும் மிஷனரியுமான திரு G. சுரேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு கர்த்தருடைய செய்தியை நமக்கு பகிர்ந்தளித்தது மகவும் சிறப்பாக அமைந்தது.

**சிறுவர்களுக்கான சிறப்பு ஆராதனை:** சிறுவர் ஆராதனை சிறப்பாக நடைப்பெற ஆசிரியர், பெற்றோர் மற்றும் பிள்ளைகளை எடுத்துகொண்ட முயற்ச்சிகளுக்காக நன்றிக்கூறுகிறேன். தொடர்ந்து வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். திருச்சபையின் வளர்ச்சியில் உங்கள் முழுஆதரவை தாருங்கள்.

இந்த விடுமுறை நாட்களில் தாயகம் மற்றும் பிற இடங்களுக்கு பயணப்படுகிற அனைவரோடும் கர்த்தருடைய பாதுகாப்பும் அரவணைப்பும் இருக்கவேண்டும் என்று சொல்லி ஜெபிப்போம். உங்கள் ஊக்கமான ஜெபமும், ஆதரவும், ஈடுபாடும் நம் திருச்சபை ஊழியத்தில் அதிகரிக்க, அதிகமாய் ஜெபித்திட வேண்டுகிறேன். அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

இப்படிக்கு ...
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
S. சுரேஷ் ராஜன்

# வேதாகம துணுக்கு




## சங்கீத புஸ்தகம்

- புத்தகம் 1 (சங்கீதம் 1–41)
- புத்தகம் 2 (சங்கீதம் 42–72)
- புத்தகம் 3 (சங்கீதம் 73–89)
- புத்தகம் 4 (சங்கீதம் 90–106)
- புத்தகம் 5 (சங்கீதம் 107–150)

எழுத்தாளர்கள்:

- 73 சங்கீதங்கள் – தாவீது
- 12 சங்கீதங்கள் – ஆசாப் குமாரர்கள்
- 11 சங்கீதங்கள் – கோராகு குமாரர்கள்
- 50 – அறியபடாதவர்கள்
- 2 – சாலமோன் இராஜா
- 1 – மோசே
- 1 – ஏதான்
- 1 – ஹேமான்

பலவேறு பகுதிகளை கொண்டு முக்கியத்துவம் வாய்ந்தது.

5 புத்தகங்களை அடங்கியது நாம் பார்க்கும் 150 பாடல்களை கொண்ட சங்கீத புத்தகம்.

வேதாகம களஞ்சியம்

மேலும் இந்த புத்தகங்களில் கீழ் வரும் தலைப்பின் கீழே பாடல்கள் இயற்றப்பட்டுள்ளது:

- பாமாலைகள்
- சமுதாயத்தை குறித்த புலம்பல்கள்
- இராஜரீக பாடல்கள்
- சொந்த புலம்பல்கள்
- நன்றி செலுத்தும் பாடல்கள்

எல்லா சூழ்நிலைக்கும் இந்த சங்கீத பாடல்கள் அமைவதால் – பலர் இதை பொதுவாக பயன்படுத்துகின்றனர். ஆகவேதான் யார் வேதாகமத்தை திறந்தாலும் இலகுவாக இந்த பகுதிகள் கண்களில் படும்படியாக இவை வேதாகமத்தின் நடு பகுதியில் இணைத்திருக்கிறார்கள் !!

# அற்புதக்கரங்கள்

ஆலன் கார்டினர் என்பவர் 19–ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு மிஷனரிப் போதகராவார். ஒரு முறை கடலில் படகு மூலமாகப் பயணம் செய்யும்போது படகு மூழ்கியதில் மரணம் அடைந்தார். அநேக நாட்களுக்குப் பிறகு அவருடைய படகும், சடலமும் கரையில் ஒதுங்கின. அப்போது அவர் உபயோகித்து வந்த டைரி கண்டுபிடிக்கப்பட்டது. தன்னுடைய மிஷனரி வாழ்க்கையில் அடைந்த துன்பங்கள், பசி, தனிமை, மனிதர்கள் கொடுத்த உபத்திரவங்கள் ஆகியவற்றை அவர் டைரியில் குறித்து வைத்திருந்தார். ஆனால் மரிப்பதற்கு முன்பாக அவர் கடைசியாக எழுதியிருந்த காரியம் "இவை எல்லாவற்றின் மத்தியிலும் என் தேவனுடைய அற்புத கரம் என்னைத் தாங்கி வழி நடைத்தியிருப்பதை நான் மீண்டும் மீண்டும் உணரமுடிகிறது. அதற்காக அவரை ஸ்தோத்தரிக்கிறேன்," என்பதே.

ஒரு வேளை நீங்கள் இப்போது பலவிதமான இன்னல்களுக்குள்ளாகக் கடந்து சென்று கொண்டிருக்கலாம். நினையாதவிதத்தில் உபத்திரவங்கள் வந்து கொண்டிருக்கலாம், ஆயினும் நீங்கள் தேவனுக்கு உண்மையாக இருந்தால், உங்களைத் தாங்கும் அவரது கரத்தை எப்பொழுதும் நீங்கள் உணரமுடியும். அதற்காக அவரை ஸ்தோத்தரியுங்கள். அவருடைய பாதுகாக்கும் கரம் மட்டும் இல்லாமல் போனல் நாம் எப்போதோ அழிந்து போயிருப்போம். அவருக்கே நன்றி

பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். 2கொரி 11–27

# தோலைக்கருப்பாக்கிய ஊழியர்



ஆப்பிரிக்க மக்களை அதிகம் நேசித்த ஜான் ஹவார்டு என்ற வெள்ளைக்கார மனிதர் ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஊழியம் செய்துவந்தார். அவர் அங்குள்ள மக்களை போல் காணப்படவேண்டுமென்று விரும்பி தனது வெள்ளைத் தோலைக் கருப்பாக்க முயற்சித்தார். அதற்காகத்

தன்னுடைய சரிரத்தில் பலவகைக் கொடிய விஷ மருந்துகளைப் பூசி சூரிய ஒளியில் பல நாட்கள் விழுந்து கிடந்தார். தார்போன்ற ஒரு வித கருப்புத்தைலத்தையும் தம் உடல் மீது பூசிக்கொண்டு இப்படியே தம் தோலைப் படிப்படியாகக் கருமையாக்கிக் கொண்டு வந்தார். தம்மை நீக்ரோ மக்களுக்கு ஒப்பாக மாற்றிய பின்னர் அவர்கள் மத்தியில் ஊழியம் செய்தபோது நீக்ரோக்கள் அவரை அந்நியராக அல்ல தம் ஜனமாகவே கருதி அவர் பிரசங்கத்தை உன்னிப்பாகக் கவனித்து வந்தனர். அதனால் பலர் இயேசுவிடம் வழி நடத்தப் பட்டார்கள். பலர் அவரைக்கனம் பண்ணினார்கள்.

அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. எபி.2:17.

# அம்மாவின் மிஷினெரித்தளம் எங்கே...?

ஒரு முறை ஒரு தாயார், பில்லிகிரஹாமிடம் தன் இரண்டு சிறுகுழந்தைகளோடு வந்தார்கள். "ஐயா எனக்கு மிஷினெரி ஊழியம் செய்ய ஆவலாயிருக்கிறது. என் இரண்டு குழந்தைகளையும் விட்டுவிட்டு தூர இடத்திற்கு மிஷனெரியாகச் செல்ல விரும்புகிறேன். உங்கள் ஆலோசனை என்ன?'' என்று கேட்டார்கள்.

பில்லிகிரஹாம் சொன்னார், "அம்மா, திருமணமாகித் தாயாகி விட்ட ஒரு ஸ்திரீ செய்யும் வல்லமையான மிஷினெரிப்பணி, தன் வீட்டில் அமர்ந்து பிள்ளைகளைத் தேவபக்தியில் வளர்ப்பது தான். உங்கள் வீட்டையே மிஷினெரித்தளமாகவும், உங்கள் முழங்கால்களையே சுவிசேஷ ஆயுதமாகவும் பயன்படுத்துங்கள்''

கர்த்தர் உங்களுக்கு மேன்மையான தாயின் பொறுப்பைத்தந்துள்ளார். அதைச் சிறந்த முறையில் நிறைவேற்றி முடிப்பதைப் பார்க்கிலும் வேறு மேன்மையான மிஷினெரி அழைப்பு ஒன்றுமில்லை. வீட்டில் உங்கள் பொறுப்புகளை முடித்துவிட்டு மீதி நேரங்களில் உங்கள் பகுதியில் நீங்கள் உற்சாகமாய் ஊழியம் செய்யலாம். உங்கள் சபையில் உங்கள் ஆலயத்தில் உங்களது உதவி

தேவைப்படலாம். உண்மையான மிஷினெரிப்பணி உங்கள் வீட்டில் ஆரம்பித்து, அண்டை அயலாரிடம் பரவட்டும்!

இந்த மூன்று மிஷினெரிகளின் வாழ்க்கை முறை நம்மை, சீர்படுத்தும், நெறிப்படுத்தும் சாட்சிகள்.

---

# ABC Scriptures

By Mrs. Jeyantha John

**A** Above all else, guard your heart for everything you do flows from it.
Proverbs 4:23

**B** Be strong and courageous. Don't be afraid, don't be discouraged, for the Lord your God is with you wherether you go.
Joshua 1:9

**C** Create in me a clean heart, O God, and make me willing to obey you.
Psalm 51:10

**D** Do to others what you would have them to do you.
Matthew 7:12

**E** Every good and perfect gift is from above.
James 1:17

**F** For we are God's masterpiece, created anew in Christ Jesus to do the good things he planned for us long ago.
Ephesians 2:10

**G** Give thanks to the Lord for He is good; His love endures forever.
Psalm 107:1

**H** Honor your father and mother.
Ephesians 6:2

**I** I praise you for I am fearfully and wonderfully made; your works are wonderful, I know this full well.
Psalm 139:14

**J** Jesus Christ is the same yesterday, today, and forever.
Hebrews 13:8

**K** Know that the Lord is God. It is He who made us, and we are His.
Psalm 100:3

**L** Love the Lord your God with all your heart, soul, mind, and strength. And love your neighbor as yourself.
Luke 10:27

**M** May the words of my mouth and the meditation of my heart be pleasing to you, O God.
Psalm 19:14

**N** Nothing in all creation will be able to separate us from the love of God.
Romans 8:39

**O** On the third day he will restore us, that we may live in his presence.
Hosea 6:2

**P** Pray without ceasing; give thanks in all circumstances.
1 Thessalonians 5:17

**Q** (be) Quick to listen, slow to speak, and slow to become angry.
James 1:19

**R** Restore to me the joy of your salvation and make me willing to obey you.
Psalm 51:12

**S** Seek the kingdom of God above all else - and live righteously - and He will give you everything you need.
Matthew 6:33

**T** Trust the Lord your God with all your heart, and lean not on your own understanding.
Proverbs 3:5

**U** Unto us a child is born, unto us a son is given.
Isaiah 9:6

**V** Very early in the morning, long before sunrise, Jesus went to a place where he could be alone to pray.
Mark 1:35

**W** Wait for the Lord. Be strong and take heart and wait for the Lord.
Psalm 27:14

**X** eXalt the Lord our God and worship on his holy mountain. For the Lord our God is holy.
Psalm 99:9

**Y** Your word is a lamp to my feet and a light to my path.
Psalm 119:105

**Z** Zaccheaus, hurry down! Today is my day to be a guest in your home.
Luke 19:5

## பரலோகத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன் இயேசு கற்பித்த மூன்று பிரதான கற்பனைகள்

**க**டந்த நாட்களில், கிறிஸ்து நமக்காக மரித்து மூன்றாம் நாளில் மரணத்தை வென்று உயிரோடெழுந்தார், இதன் மூலம் நாம் நமது பாவங்கள் கழுவப்பட்டவர் களாகி தேவனை அப்பா பிதாவே என்று அழைக்கும் பத்திர சுவிகாரத்தைப் பெற்றோம் என்று அவர் நமக்காக செய்து முடித்த காரியங்களைக் குறித்து சிந்தித்தோம். ஆனால் நம்மில் எத்தனை பேர் அவர் நமக்கு போதனையாக கூறிச்சென்ற காரியங்களை நம் வாழ்கையில் செயல்படுத்த எத்தனிக்கின்றோம். கிறிஸ்துவானவர் இந்த உலகத்தில் வாழந்த நாட்களில் அனேக காரியங்களை நமக்கு கற்பனையாக ஆலோசனையாக கூறிச்சென்றார் இன்னும் குறிப்பாக, அவர் உயிரோடெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுவதற்கு முன் நாற்பது நாட்கள் தமது சீஷர்களோடிருந்த அந்த நாட்களில், அவரது பரமேறுதலுக்குப் பின் அவர்கள் இந்த உலகத்தில் எப்படி இருக்க வேண்டும் என அனேக காரியங்களை கற்பித்தார். அப்படி அவர் போதித்த மூன்று காரியங்களை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### 1. சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்.

**ஆ**கையால், “நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷர்களாக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து” என்று மத்தேயு 28:19 ல் நாம் வாசிக்கின்றோம். நமது வாழ்கையில் எத்தனையோ முறை இந்த பகுதியை நாம் வேதத்திலே படித்திருக்கிறோம் செய்திகள் வாயிலாக கேட்டிருக்கிறோம் ஆனால் அதன் விளைவு அல்லது நம்முடைய செயல்பாடுகள் குறித்து நாம் சிந்தித்திருக்கிறோமா?.

### 2. உபதேசம் பண்ணுங்கள்:

“**நா**ன் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்” என்று மத்தேயு 28:20 கூறுகிறது. இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் அனேக காரியங்களை நமக்கு கற்று தந்திருக்கிறார்.

அவருடைய வாழ்கை முறைமை நமக்கு முன் வைக்கப்பட்ட ஒரு முன் உதாரணம். அவருடைய போதனைகள், தேவனுக்கும் அவருக்கும் உள்ள உறவு, அந்த உறவிலே நாம் எப்படி நிலைத்திருப்பது, தேவனிடத்தில் நம் விண்ணப்பங்களை வேண்டுதல்களை எப்படி வைப்பது என்று அனேக காரியங்களை நமக்கு போதித்திருக்கிறார். இவற்றை நாம் நம்முடைய வாழ்விலே பின் பற்றுகிறோமா? பிறருக்கு உபதேசிக்க முற்படுகிறோமா?

**3. உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுங்கள்:**

“என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்பு கிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் தங்கி இருங்கள் என்றார்”. என்று லூக்கா 24:49 கூறுகிறது. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் அதன் நிறைவேறுதலையும் நாம் பார்க்கிறோம். இது கிறிஸ்துவானவர் உயிரோடிருந்த நாட்களில் தம் சீஷர்கட்கு போதிக்கும் போது “சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்ருளுவார்” (யோவான் 14:16) என்று அருளப்படப் போகிற ஆவியானவரைக் குறித்து போதித்த அந்த போதனை தான் இங்கு மீண்டுமாக நினைவுறுத்தப்படுகிறது, நிறைவேறுகிறது. நமக்குள்ளே வாசம் செய்யும் அந்த ஆவியானவரின் செயல்பாடுகட்கு நாம் நம்மை ஒப்பக்கொடுத்து அவர் நமக்குள்ளே வாசம் பண்ணவும், நமது அனுதின வாழ்வில் அவர் செயல்படவும் நம்மை அர்ப்பணிக்கின்றோமா?

சிந்திப்போம்! செயல்படுவோம்! தேவன் தாமே நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் இத்தகைய மேலான அனுபவங்களை கடந்து வரும் பாக்கியத்தை தந்தருள்வாராக.

**Article by: M. Nesamony.**

நன்றி உணர்வினை முதலில் வார்த்தையாகவும் தொடர்ந்து வாழ்க்கையாகவும் வெளிப்படுத்துவோம். (கொலோ 3:15)



# சிலந்தி ...

**இவ்வளவு பெரிதான் ரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம். (எபி 2:4).**

ஞானி ஒருவன் ஒரு நாள் சிலந்தி ஒன்று தான் அபாயநிலையில் இருக்கும் போது தன்னை தப்புவித்துக் கொள்ள என்ன செய்கிறது என்று அறிய விரும்பினான். சிலந்தி ஞானமுள்ள பூச்சி என்றும் அறிந்திரிந்தான். ஆகையால் அவன் சிலந்தி பூச்சி ஒன்றைப்பிடித்து மிதப்பக்கூடிய மரக்கட்டையில் வைத்து. அருகில் உள்ள குளத்தில் மரக்கட்டையை மிதக்க விட்டான். தான் கரையில் அமர்ந்தபடி அது என்ன செய்கிறது என கவனித்துக் கொண்டிருந்தான்.

சிலந்தி கட்டையின் நான்கு பகுதியும் நடந்தது. சீக்கிரமே தான் இருக்கிற இடம் மிகவும் ஆபத்தானது என்று உணர்ந்து கொண்டது. உடனே அது தன் வாயிலிருந்து உண்டாகிற நூலை காற்றில் பறக்க விட்டது.அது காற்றிலே அடிபட்டு கடைசியாக கரையிலிருந்த புல்லின்மேல் ஒட்டிக்கொண்டது. தான் பறக்க விட்ட நூல் கரையில் உள்ள புல்லில் ஒட்டிக்கொண்டது என்பதை உணர்ந்து கொண்டதும் சிலந்தி கட்டையை மெதுவாக கரைக்கு இழுத்திட சிறிது நேரத்தில் கட்டை கரையை அடைந்தது. சிலந்தி சந்தோஷத்துடன் கரையை அடைந்ததும் ஓடியது.

அன்பாகவர்களே! அற்ப்ப சிலந்தியானது தான் இருக்கும் இடமானது ஆபத்தானது என்பதை உணர்ந்து வெகு வேகமாக தப்புவித்துக் கொள்ளும்படியான வழியை உண்டாக்கி தன் ஜீவனைத் தப்புவித்துக் கொண்டது போல நாம் பார்க்கிற வானமும், பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது. (2 பேதுரு 3:12) அப்படி என்றால் வரும் அழிவுகளுக்கு தப்புவித்துக் கொள்ள இயேசுவே வழியும் சத்தியமுமாக இருப்பதால், அவரைப்பற்றிக் கொண்டு அக்கரையாகிய மோட்சத்தினை அடைய முயற்சிப்போம். அவரையேப் பற்றிக்கொள்வோம்.

- **நெல்சன் சோபித ராஜ்.**

---

**மனந்திரும்புதல் என்பது மன்னிப்பு கோரும் விண்ணப்பம் மட்டுமல்ல, அது கனிதரும் வாழ்வு [மத் 3:8]**





**"Truly, truly, I say to you, he who believes in Me, the works that I do, he will do also; and greater works than these he will do; because I go to the Father." Jesus Christ**

## *Did u Know…What Famous History Makers Said about Jesus…?*



**Abraham Lincoln "Yes, I do love Jesus"** President Lincoln is best known for his stance on the abolition of slavery. He was not a well-educated man but, was willing to learn anything that he needed to be a great leader. He led the United States of America through one of the most dramatic changes in American history. Most biographers would say that Abraham Lincoln was not a Christian, but when he was asked if he loves Jesus, he replied:


"When I left Springfield, I asked the people to pray for me. I was not a Christian. When I buried my son, the severest trial of my life, I was not a Christian. But when I went to Gettysburg and saw the graves of thousands of our soldiers, I then and there consecrated myself to Christ. Yes, I do love Jesus."



**Mahatma Gandhi**, Father of Nation & Indian political leader (1869-1948)

"A man who was completely innocent, offered himself as a sacrifice for the good of others, including his enemies, and became the ransom of the world. It was a perfect act."

## Albert Einstein – Scientist and Mathematician



I am a Jew, but I am enthralled by the luminous figure of the Nazarene. Jesus is too colossal for the pen of phrase-mongers, however artful¡¨. He further added: "No man can read the gospels without feeling the actual presence of Jesus. His personality pulsates in every word. No myth is filled with such life. Theseus and other heroes of his type lack the authentic vitality of Jesus."



## Charles Dickens, British writer, 1812-1870


"I commit my soul to the mercy of God, through our Lord and Savior Jesus Christ. I now most solemnly impress upon you the truth and beauty of the Christian religion as it came from Christ Himself, and the impossibility of going far wrong if you humbly but heartily respect it."

## Calvin Coolidge, 30th President of USA



"The foundations of our society and our government rest so much on the teachings of the Bible that it would be difficult to support them if faith in these teachings would cease to be practically universal in our country."

## Billy Graham Christian Evangelist



"Jesus was not a white man; He was not a black man. He came from that part of the world that touches Africa and Asia and Europe. Christianity is not a white man's religion and don't let anybody ever tell you that it's white or black. Christ belongs to all people; He belongs to the whole world."

***Source: s&rmastermind***
















**For more details...**




**Mr. Melbin Paul**
**056 44 11 22 5**

# சிறுவர் பகுதி / Children's Corner


## Cartoon of the Month

**RESCUE 'COPTER** A Joyful 'toon by Mike Waters




Righteousness and justice are the foundation of your throne; love and faithfulness go before you. – PSALM 89:14 NIV

**Parents… narrate the story to ur kid…**



# June'19 Children's Quiz (Primary & Above)

**FROM THE BOOK OF PROVERBS CHAPTER 16-25**

**(Referred from NIV BIBLE)**

1) In their ________ humans plan their course, but the Lord establishes their _________
   a) Minds, steps b) hearts, steps c) hearts, plans

2) What is seen as a charm by the one who gives it?
   a) bribe b) Gifts c) love

3) What is compared to deep waters?
   a) Heart's desires b) wisdom c) words of the mouth

4) ___________ will make you poor.
   a) laziness b) sleep c) foolishness

5) ___________ is folly and shame.
   a) Answering before listening b) acting without knowing c) speaking out of anger

**COMPLETE THE VERSE:**

6) "Listen to _______ and accept _____________ and at the end you will be counted among the wise"

7) "The _________ is made ready for the day of _________, but the ___________ rests with the Lord"

8) "Whoever plots _________ will be known as a ___________"

9) "Like a __________ or a ___________ is reliance on the unfaithful in a time of ___________"

10) With whom you must not make friends with?

11) What is like breaching a dam and what are its consequences?

**Last Month Children's Quiz Correct Answers: June- 2019**

**From the Book of Prov 11 to 15**

1-(b) Hearts, steps (16:9)

2-(a) Bribe (17:8)

3-(c) Words of the mouth (18:4)

4-(b) Sleep (20:13)

5-(a) Answering before listening (18:13)

6-Advice, discipline (19:20)

7-Horse, battle, victory (21:31)

8-Evil, schemer (24:8)

9-Broken tooth, lame foot, trouble (25:19)

10-Hot tempered person (22:24)

11- Starting a quarrel (17:14) lose the relationship, love and develop grudge over them which leads us to sin

**Children who wrote the Children's Quiz Correct Answers:**

Roshan, Shelbino, Dennis Eastrine, Jayne John,
Analin, Angelin, Joshua




Hartlyn Herchil / Crasslin Denova
Ridhun Yojit / Rishon Yojit
Johan Sanjo / Jason Eric
Jonathan Asher / Eion Jayden
Jeremiah Alan / Jemima Ashni

**Children who successfully did the Bible Word Search**

Roshan, Ridhun, Shelbino, Johan Sanjo,
Earline, Jason Eric, Jonathan, Eric Jaden

**Children who successfully did the Bible Cross Word**

Roshan, Shelbino, Eastrine, Joshua, Jonathan,
Diniya, Angelin, Analin



# Kids Coloring (Kinder & Beginner)




Dear Kids...
Write your name...

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

# Bible Word Search (Beginner / Primary)


# ARMOR OF GOD

## WORD SEARCH

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| P | E | A | C | E | S | S | U | S | I | C | X | O | R | D |
| L | B | Q | Z | O | W | A | M | H | P | T | C | V | I | V |
| C | E | X | B | H | O | D | I | I | X | K | M | R | G | K |
| H | L | U | B | O | R | K | P | E | K | L | R | W | H | Z |
| E | T | J | R | H | D | E | N | L | Y | C | H | U | T | S |
| L | E | G | E | O | G | E | A | D | S | E | T | O | E | A |
| M | R | X | A | A | L | O | J | B | O | I | M | U | O | L |
| E | C | T | S | N | U | K | U | G | F | X | X | S | U | V |
| T | R | R | T | U | S | F | M | F | J | H | W | P | S | A |
| F | N | U | P | L | C | N | B | V | S | J | B | I | N | T |
| B | I | T | L | T | H | T | H | C | H | H | U | R | E | I |
| N | F | H | A | C | L | X | C | U | O | A | X | I | S | O |
| E | Q | Z | T | D | I | G | Z | J | E | H | W | T | S | N |
| T | W | T | E | D | L | K | J | O | S | H | U | I | U | F |
| W | A | F | A | I | T | H | U | F | A | P | L | P | O | B |





**Truth**
**Belt**
**Righteousness**
**Breastplate**
**Peace**
**Shoes**
**Faith**
**Shield**
**Salvation**
**Helmet**
**Spirit**
**Sword**



| Write Your Name Here… | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

# Bible Cross Word (Primary & Above)

**GOD TESTED ABRAHAM (Genesis 22:1-19)** | **Your Name:**





**Across:**

3) What type of offering (sacrifice) was Abraham to offer? (Genesis 22:6)
6) God was pleased with Abraham because he ____the Lord. (Genesis 22:18)
7) Isaac asked, "Where is the _______for the burnt offering? (Genesis 22:7)
9) God compared the number of Abraham's descendants as many as the ___on the seashore. (Genesis 22:17)
14) God told Abraham his future children will take possession of the cities of their _______. (Genesis 22:17)
16) Who was the father of Isaac? (Genesis 22:6)
18) God told Abraham to ____his only son Isaac. (Genesis 22:2)
19) The number of servants Abraham took with him (Genesis 22:3)
20) Who called out to Abraham telling him not to sacrifice Isaac? (Genesis 22:12)

**Down:**

1) God told Abraham He would make his future children as many as the ___in the sky. (Genesis 22:17)
2) Who tested Abraham? (Genesis 22:1)
4) What did Isaac carry for the sacrifice? (Genesis 22:6)
5) Future children that claim Abraham as their father (Genesis 22:17)
8) God told Abraham to sacrifice his son on this mountain. (Genesis 22:2)
10) In order to prepare the sacrifice Abraham built an _____. (Genesis 22:9)
11) When the angel told Abraham not to sacrifice Isaac, Abraham looked up and saw a ____ (Genesis 22:13)
12) Who was Abraham's only son? (Genesis 22:1)
13) Abraham told Isaac that God would __________the lamb for the sacrifice. (Genesis 22:8)
15) The Lord said He would _______Abraham for being faithful. (Genesis 22:16-17)
17) God was pleased with Abraham when he obeyed the Lord and was willing to sacrifice his only______ Isaac. (Genesis 22:12)

---



# P U Z Z L E (Primary & Above)


**AND HIS NAME SHALL BE CALLED...... Jesus had many names. All the words below are used to refer to Jesus in the Bible. Fit the names into the puzzle.**

**HINT: Start with the longest names.**

GOD
SUN
WAY
ONE
ROOT
WORD
LAMB
GATE
LORD
KING
VINE
LIFE

SEED
STAR
RABBI
BREAD
LIGHT
TRUTH
ALPHA
OMEGA
STONE
FATHER
PRINCE
BRANCH

CHRIST
SAVIOR
MESSIAH
TEACHER
REDEEMER
IMMANUEL
SHEPHERD
COUNSELOR
BRIDEGROOM
RESURRECTION



# வேத வினா-விடை போட்டி

## (எசேக்கியேல் 6–15)

1. கர்த்தர் தம்முடைய உக்கிரத்தை எப்படி தீர்த்துக் கொள்வார்?
2. கர்த்தர் எந்தச் செடியை அக்கினிக்கு இரையாக ஒப்புக்கொடுத்தார்?
3. யாருக்கு முடிவு வருகிறது என்று கர்த்தர் உரைக்கிறார்?
4. நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை தப்புவிக்கும் 3 புருஷர்கள் யார்?
5. எங்கு சந்தோஷசத்தம் இல்லை?
6. யூதாவின் ஆலயங்களின் உள்சுவற்றின் சுற்றிலும் சித்திரந்தீரப்பட்டிருந்தது என்ன?
7. தூரமான காலங்களைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தது யார்?
8. பெனாயாவின் குமாரனாகிய பெலத்தியா இஸ்ரவேலின் வம்சத்தாருக்கு உரைத்த தீர்க்கதரிசனம் என்ன?
9. யாருக்கு விரோதமாகக் கர்த்தர் தம் முகத்தைத் திருப்புவார்?
10. எசேக்கியேல் கண்களை ஏறெடுத்து வடக்கேப் பார்த்தபோது அவன் கண்ட காட்சி என்ன?
11. எசேக்கியேல் தீர்க்கதரிசி க்கு முன்பாக வந்து உட்கார்ந்தது யார்?
12. யூதா ஜனங்கள் ஆலயத்து வடக்கு வாசலின் நடையிலே யாருக்காக அழுதுக் கொண்டிருந்தார்கள்?
13. ஒரு தேசம் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணிப் பாவஞ்செய்தால் அந்த தேசத்திற்கு சம்பவிப்பது என்ன?
14. எசேக்கியேல் கேபா நதியண்டையிலே கண்ட ஜீவன் எப்படி இருந்தது?
15. இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் எதற்கு ஒப்பாயிருக்கிறார்கள்?

***June* மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

**திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்**

**திருமதி. சிந்துஜா சதீஷ்**

**திரு. M.C கிறிஸ்டோபர்**

**திருமதி. பமீலா டேனியல்**

**திருமதி. ஹெப்சிபாய் நேசமணி**

**திருமதி. ராதிகா செல்வகுமார்**

**திருமதி. ஜெயின் ராஜவேல்**

**திருமதி. அகஸ்டா லாரன்ஸ்**

**திருமதி. பிப்லின் நெல்சன்**

**திருமதி. பெட்ரீஷியா ஜேசன்**

**திருமதி. ரோஸ்லின் பாலாஜி**

**திருமதி. ஜெயந்தா ஜாண்**

**திருமதி. எபென் A.பிரசாத்**

**வாழ்த்துக்கள்...!**



## வேதாகம கணக்கு:

யெதிதியாவுக்கு இருந்த இரதங்களுடன், எகிப்து மன்னனின் பிரதான இரதங்களை கூட்டி, தேவனுடைய மனுஷனின் பணிவிடைக்காரன் இந்த இருபது அப்பங்களை இத்தனை பேருக்கு எப்படி வைப்பது என்று குறிப்பிட்ட எண்ணிக்கையால் வகுத்து, விசுவாச தகப்பனின் குமாரத்தி ஒருத்தி சாத்தானால் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆண்டால் பெருக்கி, தீர்க்கதரிசி ஒருவனுக்கு கொடுக்கப்பட்ட கூலியை கூட்டினால் கிடைக்கும் எண் குறிப்பிடுவது எது?

## வேதாகம விடுகதை:

1– முதன் முதலில் தன் மகளுக்கு பொய் பேச கற்றுக் கொடுத்த தாய் யார்?

2– முதலில் தன் தந்தையிடம் பொய் பேசிய மகன் யார்?

3– கர்த்தரின் நாமத்தை நிந்தித்து தூஷித்தவனுடைய தாயின் பெயர் என்ன?

4– ஒரே குடும்பத்தில் திருமணம் செய்த தந்தை மகன் யார்?

5– எல்லா மனிதர்களும் மரித்த பின்பு தான் துக்கம் கொண்டாடுவார்கள், ஆனால் ஒரு பெண்ணிற்கு மட்டும் தான் அவளை உயிரோடு அருகில் வைத்துக் கொண்டு இரண்டு மாதம் துக்கம் கொண்டாடினார்கள் அவள் யார்?

**கடந்த மாதத்திற்கான வேத வினா–விடை போட்டி விடைகள்**

1. எசேக் 4:14 | 2. எசேக் 1:3 | 3. எசேக் 5:11 | 4. புலம்பல் 2:10 | 5. புலம்பல் 1:3
6. புலம்பல் 3:25 | 7. எசேக் 3:23 | 8. புலம்பல் 4:22 | 9. எசேக் 2:10 | 10. எசேக்

**ஜுன்'மாத வேதாகம விடுகதைக்கான விடைகள்**

**ராகாப் / யோனத்தான் சவுல் / பார்வோன் மோசேயிடம் / மரண தண்டனை / உரியா / நொவதியாள் / எலியாவைக் கண்டு ஆகாப் & யேசபேல் / தானியேல் / இயேசு / லோத்து & மகள்கள்**

| ஜுன் வேதாகம கணக்கின் விடை | |
|---|---|
| கர்த்தருக்கு பகுதியாக வந்த ஆடுகளின் எண்ணிக்கை | :675 (எண்ணா: 31:37) |
| எத்தன் மாமனார் வீட்டில் வேலைக்காரனாய் வேதனைப்பட்ட காலம் | :14 (ஆதி 29:18,27) |
| பூமியின் மேல் தண்ணீர் சூழ நின்ற நாட்கள் | :150 (ஆதி 7:24) |
| தேவனுடைய மனுஷனுக்கு முதல் பலனாக வந்த கோதுமை அப்பங்களின் எண்ணிக்கை | :20 (2 இராஜா 4:42) |
| **கணக்கு: (675 X 14) / 150 + 20 = 83** | |
| **ஆரோன் பார்வோனுடைய பேசும்போது வயது : 83 (யாத் 7:7)** | |
| …..கர்த்தரின் ஊழியக்காரரின் **வயத்தை** குறிப்பிடுகிறது | |

## பிறந்தநாள் ஆசரிப்போர் *Birthday Celebrants*

| | |
|---|---|
| 01-Jul | Mr. A.Ravichandran |
| 04-Jul | Mstr. A. Eric Aaron |
| 05-Jul | Mstr. Joshuva Koshy |
| 05-Jul | Mr. P.David Raj |
| 05-Jul | Mrs. Jessy Beula John Joseph |
| 07-Jul | Mrs. Hepsi Bai Nesamony |
| 10-Jul | Mstr. Eric Jayden |
| 13-Jul | Mr. Bhaskar Rajaram |
| 13 Jul | Mrs. Pamela Rachel Daniel |
| 14-Jul | Mrs. Bavani Selvakumar |
| 14-Jul | Mr. Jason Samuel |
| 15-Jul | Mr. Sankaran Chinniyan |
| 19-Jul | Mrs. Sangeetha |
| 23-Jul | Mr. Ravindra |
| 25-Jul | Mrs. Angelin Nalini |
| 26-Jul | Mrs. Roselin Tamil Selvi |
| 28-Jul | Mr. David Sornabalan |
| 28-Jul | Mrs. Beeta Christopher |
| 29-Jul | Baby. Jania Preni |
| 29-Jul | Mstr. Dennis Roger |
| 29-Jul | Mr. Mervin Samuel |
| 30-Jul | Mrs. Maheswari |
| 31-Jul | Mr. Kingsly Stubert |
| 02-Aug | Mrs. Blessy Grace Jonish |
| 03-Aug | Mr. D.Rajavel |
| 10-Aug | Aguline abish |
| 12-Aug | Mr. Jeremiah Kingston |
| 14-Aug | Mstr. Jeremiah Alan |
| 15-Aug | Mr. Y.Mesiah Das |
| 16-Aug | Mr. Derin Joy |
| 20-Aug | Mstr. Aldan Derick |
| 24-Aug | Baby. Crasslin Devona |
| 28-Aug | Mrs. Augusta Lawrance |
| 30-Aug | Mrs. Padma Joy |
| 31-Aug | Mrs. Anitha Rajan |

**For by me your days will be multiplied, and years will be added to your life**

**Proverbs 9:11**



## திருமணநாள் ஆசரிப்போர் / *Wedding Anniversary*

| | |
|---|---|
| 04-Jul | Mr. A.S.Kannan & Mrs. Lavanaya Kannan |
| 04-Jul | P. N Jeya Chandran & Mrs. Maheswari |
| 05-Jul | Saman Raj Kumar & Mrs. Ceciliya Rajkumar |
| 08-Jul | George Rose & Mrs. Anitha Geroge |
| 12-Jul | Mr. David Livingston & Mrs. Beula Rani Livingston |
| 25-Jul | Sankaran Chinniyan & Mrs Kalyani Sankaran |
| 18-Aug | Mr. Derick Gasbath Joy & Mrs. Sheeba Derick |
| 21- Aug | Mr. M.C Christopher & Mrs. Beeta Christopher |
| 23-Aug | Mr. Jason Samuel & Mrs. Petricia Santhi |
| 26-Aug | A. Yobu & Mrs, Anna Jothi |




Happy Wedding Anniversary….

# DAILY BIBLE READING JULY – 2019

## "Your word is a lamp to my feet and light for my path"

| Da te | Morning / காலையில் | | ✓ | Evening / மாலையில் | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| 1 | சங் 126-128 | Pslm 126-128 | | யோசுவா 3 | Joshua 3 | |
| 2 | சங் 129-131 | Pslm 129-131 | | யோசுவா 4 | Joshua 4 | |
| 3 | சங் 132-134 | Pslm 132-134 | | யோசுவா 5:1-6:5 | Joshua 5:1-6:5 | |
| 4 | சங் 135-136 | Pslm 135-136 | | யோசுவா 6:6-27 | Joshua 6:6-27 | |
| 5 | சங் 137-138 | Pslm 137-138 | | யோசுவா 7 | Joshua 7 | |
| 6 | சங் 139 | Pslm 139 | | யோசுவா 8 | Joshua 8 | |
| 7 | சங் 140-141 | Pslm 140-141 | | யோசுவா 9 | Joshua 9 | |
| 8 | சங் 142-143 | Pslm 142-143 | | யோசுவா 10 | Joshua 10 | |
| 9 | சங் 144 | Pslm 144 | | யோசுவா 11 | Joshua 11 | |
| 10 | சங் 145 | Pslm 145 | | யோசுவா 12-13 | Joshua 12-13 | |
| 11 | சங் 146-147 | Pslm 146 -147 | | யோசுவா 14-15 | Joshua 14-15 | |
| 12 | சங் 148 | Pslm 148 | | யோசுவா 16-17 | Joshua 16-17 | |
| 13 | சங் 149-150 | Pslm 149-150 | | யோசுவா 18-19 | Joshua 18-19 | |
| 14 | அப் 1 | Acts 1 | | யோசுவா 20-21 | Joshua 20-21 | |
| 15 | அப் 2 | Acts 2 | | யோசுவா 22 | Joshua 22 | |
| 16 | அப் 3 | Acts 3 | | யோசுவா 23 | Joshua 23 | |
| 17 | அப் 4 | Acts 4 | | யோசுவா 24 | Joshua 24 | |
| 18 | அப் 5 | Acts 5 | | நியாயாதி 1 | Judges 1 | |
| 19 | அப் 6 | Acts 6 | | நியாயாதி 2 | Judges 2 | |
| 20 | அப் 7 | Acts 7 | | நியாயாதி 3 | Judges 3 | |
| 21 | அப் 8 | Acts 8 | | நியாயாதி 4 | Judges 4 | |
| 22 | அப் 9 | Acts 9 | | நியாயாதி 5 | Judges 5 | |
| 23 | அப் 10 | Acts 10 | | நியாயாதி 6 | Judges 6 | |
| 24 | அப் 11 | Acts 11 | | நியாயாதி 7 | Judges 7 | |
| 25 | அப் 12 | Acts 12 | | நியாயாதி 8 | Judges 8 | |
| 26 | அப் 13 | Acts 13 | | நியாயாதி 9 | Judges 9 | |
| 27 | அப் 14 | Acts 14 | | நியாயாதி 10 | Judges 10 | |
| 28 | அப் 15 | Acts 15 | | நியாயாதி 11 | Judges 11 | |
| 29 | அப் 16 | Acts 16 | | நியாயாதி 12 | Judges 12 | |
| 30 | அப் 17 | Acts 17 | | நியாயாதி 13 | Judges 13 | |
| 31 | அப் 18 | Acts 17 | | நியாயாதி 14 | Judges 14 | |

# DAILY BIBLE READING AUGUST – 2019

## "Your word is a lamp to my feet and light for my path"

| Date | Morning / காலையில் | | ✓ | Evening / மாலையில் | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| 1 | அப் 19 | Acts 19 | | நியாயாதி 15 | Judges 15 | |
| 2 | அப் 20 | Acts 20 | | நியாயாதி 16 | Judges 16 | |
| 3 | அப் 21 | Acts 21 | | நியாயாதி 17 | Judges 17 | |
| 4 | அப் 22 | Acts 22 | | நியாயாதி 18 | Judges 18 | |
| 5 | அப் 23 | Acts 23 | | நியாயாதி 19 | Judges 19 | |
| 6 | அப் 24 | Acts 24 | | நியாயாதி 20 | Judges 20 | |
| 7 | அப் 25 | Acts 25 | | நியாயாதி 21 | Judges 21 | |
| 8 | அப் 26 | Acts 26 | | ருத் 1 | Ruth 1 | |
| 9 | அப் 27 | Acts 27 | | ருத் 2 | Ruth 2 | |
| 10 | அப் 28 | Acts 28 | | ருத் 3,4 | Ruth 3,4 | |
| 11 | ரோமர் 1 | Romans 1 | | 1 சாமுவேல் 1 | 1 Samuel 1 | |
| 12 | ரோமர் 2 | Romans 2 | | 1 சாமுவேல் 2 | 1 Samuel 2 | |
| 13 | ரோமர் 3 | Romans 3 | | 1 சாமுவேல் 3 | 1 Samuel 3 | |
| 14 | ரோமர் 4 | Romans 4 | | 1 சாமுவேல் 4 | 1 Samuel 4 | |
| 15 | ரோமர் 5 | Romans 5 | | 1 சாமுவேல் 5,6 | 1 Samuel 5,6 | |
| 16 | ரோமர் 6 | Romans 6 | | 1 சாமுவேல் 7.8 | 1 Samuel 7,8 | |
| 17 | ரோமர் 7 | Romans 7 | | 1 சாமுவேல் 9 | 1 Samuel 9 | |
| 18 | ரோமர் 8 | Romans 8 | | 1 சாமுவேல் 10 | 1 Samuel 10 | |
| 19 | ரோமர் 9 | Romans 9 | | 1 சாமுவேல் 11 | 1 Samuel 11 | |
| 20 | ரோமர் 10 | Romans 10 | | 1 சாமுவேல் 12 | 1 Samuel 12 | |
| 21 | ரோமர் 11 | Romans 11 | | 1 சாமுவேல் 13 | 1 Samuel 13 | |
| 22 | ரோமர் 12 | Romans 12 | | 1 சாமுவேல் 14 | 1 Samuel 14 | |
| 23 | ரோமர் 13 | Romans 13 | | 1 சாமுவேல் 15 | 1 Samuel 15 | |
| 24 | ரோமர் 14 | Romans 14 | | 1 சாமுவேல் 16 | 1 Samuel 16 | |
| 25 | ரோமர் 15 | Romans 15 | | 1 சாமுவேல் 17 | 1 Samuel 17 | |
| 26 | ரோமர் 16 | Romans 16 | | 1 சாமுவேல் 18 | 1 Samuel 18 | |
| 27 | 1 கொரி 1 | 1 Corin 1 | | 1 சாமுவேல் 19 | 1 Samuel 19 | |
| 28 | 1 கொரி 2 | 1 Corin 2 | | 1 சாமுவேல் 20 | 1 Samuel 20 | |
| 29 | 1 கொரி 3 | 1 Corin 3 | | 1 சாமுவேல் 21,22 | 1 Samuel 21,22 | |
| 30 | 1 கொரி 4 | 1 Corin 4 | | 1 சாமுவேல் 23 | 1 Samuel 23 | |
| 31 | 1 கொரி 5 | 1 Corin 5 | | 1 சாமுவேல் 24 | 1 Samuel 24 | |

# Missionary week





# Children's service










Strictly For Private Circulation
Editor: Rev. Christopher Rajendran BSC., BD., MSC. (Psy)
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: 056 7105 082
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparish.org